எடுத்துக்கொள்ளவேண்டும். ஏனென்றால் பல ஆயிரம் பேர்களுக்குக் கொடுக்கவேண்டியிருக்கிறது. ஏதோ கொஞ்ச தூரம் தள்ளிப் போய்விட்டால் தீண்டாமை இருக்கிறது என்று சொன்னால் அதை நான் ஒப்புக்கொள்ளமாட்டேன்.

SRI C. CHIRANJEEVULU NAIDU : Sir, in the matter of acquisition of sites, it is generally seen, mostly in the Chingleput district, that sites are acquired leaving a portion of the land where the well and the pumpsets are located and consequently the ryots find it difficult to cultivate the lands. So, will the Government consider the desirability of issuing specific instructions that they should acquire the entire land without leaving a small portion of the land ?

THE HON. SRI P. KAKKAN : Whenever the Government think of acquiring land, they will take the entire land without leaving a small portion of it.

"முர்ரா" எருமைக்கன்றுகள்

*54 கேள்வி.— புலவர் கா. கோவிந்தன் : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இந்திய அரசாங்கம் இனவிருத்திக்காக, கோயம்புத்தூர் கூட்டுறவு பால் வழங்கும் சங்கத் தலைவர் திரு. எம். எஸ். பழனியப்ப முதலியாருக்கு வழங்கிய முர்ரா எருமைக்கன்றுகள் எத்தனை?

(இ) அவற்றுள், இப்போது உயிருடன் இருப்பவை எத்தனை ?

(உ) பால் வழங்கும் நிலையில் உள்ளவை எத்தனை ?

(எ) அவற்றால் எவ்வளவு பால் கிடைக்கிறது ?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) 60 முர்ரா எருமைக் கடாரிக் கன்றுகள் மற்றும் 25 முர்ரா எருமைக் கடாக் கன்றுகள்.

(இ) 37 கடாரிக் கன்றுகள் & 12 கடாக் கன்றுகள்.

(உ) இதுவரை இவைகளில் எதுவும் கன்று ஈனவில்லை.

(எ) இக் கேள்விக்கு இடமில்லை.

(*a*) 60 Murrah heifer calves and 25 Murrah bull calves.

(*b*) 37 heifer calves and 12 bull calves.

(*c*) None of the animals has calves so far.

(*d*) Does not arise.

2nd February 1966]

திரு. இராம. அரங்கண்ணல் : இந்த 60 முர்ரா எருமைக் கன்றுகள் கூட்டுறவுப் பால் வழங்கும் சங்கத்திற்கு வழங்கப் பட்டதா அல்லது ஒரு தனிப்பட்டவருக்கு வழங்கப்பட்டதா ?

கனம் திரு. பூ. கக்கன் : தனிப்பட்டவருக்குத்தான். திரு. எம் எஸ். பழனியப்ப முதலியார் என்பவருக்கு வழங்கப் பட்டது. அவர் கோவாப்பரேடிவ் மில்க் சப்ளை யூனியனுடைய தலைவராக இருக்கிறார்.

திரு. இராம. அரங்கண்ணல் : இதுபோல் தனிப்பட்டவர்கள் முர்ரா எருமைக் கன்றுகள் வாங்கி பராமரிக்க முன்வந்தால் அரசாங்கம் அவர்களுக்கும் சலுகை அளிக்க முன்வருமா ?

கனம் திரு. பூ. கக்கன் : பம்பாயிலிருந்து தாயையிழந்த கன்றுகளை நமக்குக் கொடுத்திருக்கிறார்கள். அந்த முறையிலே தான் அரசாங்கம் கொடுத்துக்கொண்டு வருகிறது.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத் தலைவர் அவர்களே, அங்கிருந்து கொண்டுவரப்பட்ட கன்றுகளிலே 60 லே 37 தான் உயிருடன் இருக்கின்றன என்றும், கடா 25-லே 12 தான் உயிருடன் இருக்கின்றன என்றும் தெரிவித்தார்கள். ஆகவே கன்றுகள் இறந்ததற்குக் காரணம் என்ன என்று கண்டுபிடிக்கப் பட்டதா ? தட்பவெட்ப நிலை காரணமா ? அல்லது சரியான பாதுகாப்புக் கொடுக்கப்படவில்லையா ?

கனம் திரு. பூ. கக்கன் : அங்கிருந்து வந்த கன்றுகள் எல்லாம் இளம் கன்றுகள்.

Calves were quite young and their condition was not generally satisfactory at the time of arrival.

திரு. மீ. கலியாணசுந்தரம் : இந்த நபருக்கு இந்த உருப்படிகள் இனமாகக் கொடுக்கப்பட்டனவா ? அல்லது விலைகொடுத்து வாங்கப் பட்டதா ? அப்படியிருந்தாலும் ஒரு நபருக்கு இவ்வளவு அதிக மாகக் கொடுக்கவேண்டிய அவசியம் என்ன ?

கனம் திரு. பூ. கக்கன் : மில்க் சப்ளை யூனியனின் பிரஸிடெண்ட் என்ற முறையில் அவர் நல்ல முறையில் பணியாற்றி வருகிறார் என்ற காரணத்தால் கொடுக்கப்பட்டது.

திரு. மீ. கலியாணசுந்தரம் : அவர் நல்ல முறையில் பணி செய்து வருகின்ற காரணத்தால்தான் இப்பொழுது ஒரு படி பால்கூட இன்னும் உற்பத்தி செய்யவில்லையா ?

கனம் சபாநாயகர் : இன்னும் கன்றே போடவில்லையே.

கனம் திரு. பூ. கக்கன் : கன்றுக்குட்டியே போடவில்லையே, கன்றுபோட்ட பிறகுதானே பால் கிடைக்கும்.

[2nd February 1966

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : இனமாகக் கொடுக்கக்கூடிய மாடுகளைக் கொண்டுவருவதற்கு டிரான்ஸ்போர்ட் சார்ஜஸ் போட்டுக்கொண்டு பணக்காரர்களால்தான் வாங்க முடிகிறது. ஏழைகளாக இருக்கிறவர்களுக்கு இது முடியாது. ஆகவே, மத்திய அரசாங்கம் ஏழைகளாக இருக்கிறவர்களுக்கு இம்மாதிரி மாடுகள் வாங்குவதில் டிரான்ஸ்போர்ட் சார்ஜைக் கொடுப்பதற்கு வழிவகை செய்யப்படுமா ?

கனம் சபாநாயகர் : அதோடு கன்றுக்குட்டிக்கு ரேஷனும் கொடுக்கவேண்டும்.

கனம் திரு. பூ. கக்கன் : டிரான்ஸ்போர்ட் சார்ஜஸ்ஸை சர்க்கார் கொடுக்கவேண்டுமென்றால் அந்தச் செலவிற்கு மாடுகளை வாங்கிக் கொடுக்கலாமே. யார் டிரான்ஸ்போர்ட் சார்ஜஸ்ஸை எல்லாம் ஏற்றுக்கொள்ளுகிறார்களோ அவர்களுக்குத்தான் இனமாகக் கொடுக்கப்படுகிறது.

திரு. மீ. கலியாணசுந்தரம் : இந்தக் கன்றுகள் கொடுத்து எவ்வளவு காலம் ஆகிறது ? எப்பொழுது பலன்தரும் என்று எதிர் பார்க்கிறார்கள் ?

கனம் திரு. பூ. கக்கன் : அந்தத் தகவல் என்னிடத்தில் இல்லை. தனியாகக் கேள்விபோட்டால் விவரம் சொல்லலாம்.

திரு. சா. கணேசன் : திரு. எம். எல் பழனியப்ப முதலியாருக்குக் கொடுக்கப்பட்ட எருமைக் கன்றுகளின் போக்கு வரத்துச் செலவுகளை சர்க்காரே ஏற்றுக்கொண்டதா அல்லது அவரே ஏற்றுக்கொண்டாரா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : இது போன்று திரு. பழனியப்ப முதலியாருக்கு மட்டுமல்ல, திரு. முத்துசாமி (விளவாகுளம்), என்பவருக்கு 20 கன்றுகளும், திரு. பி. வி. வெங்கிடசாமி, (திருப்பூர்) அவர்களுக்கும், கோயம்புத்தூர் மில்க் சப்ளை சொஸைடிக்கு 55 கன்றுகளும் கொடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. சா. கணேசன் : நான் கேள்வி கேட்டது போக்குவரத்துச் செலவுகளை யார் ஏற்றுக்கொண்டார்கள் என்பது. கனம் அமைச்சர் அளித்த பதில் வினவிற்குப் பொருந்தாதது. அந்தத் தகவல் இப்பொழுது இருக்கிறதா ?

கனம் திரு. பூ. கக்கன் : தனிப்பட்டவர்கள்தான் என்று நினைக் கிறேன். அந்தத் தகவல் இப்பொழுது என்னிடத்தில் இல்லை.

MR. SPEAKER : From the answer given to the question put by the hon. Member, Srimathi Ponnammal, it seems that the persons to whom they are allotted, must take them at their own cost.

SRI SAW. GANESAN : That is an assumption.

MR. SPEAKER : Anyway it seems like that.

2nd February 1966]

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத் தலைவர் அவர்களே, இந்தக் கன்றுகளைப் பொறுத்தவரையில் இனமாகக் கொடுக்கப் பட்டன என்றும் அவைகளைக் கொண்டுவருவதற்கான செலவை அவர்களே போட்டுக் கொண்டார்கள் என்றும் அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அப்படி இனமாகக் கொடுக்கும் பொழுது ஏதாவது நிபந்தனையுடன் கொடுக்கப்பட்டதா, அல்லது எந்தவிதமான நிபந்தனையுமின்றி கொடுக்கப்பட்டதா, என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : பம்பாயிலிருந்து நிபந்தனையின்றித்தான் நாம் வாங்கினோம். அதே போல் நாம் கொடுத்ததும் நிபந்தனை யின்றித்தான்.

திரு. ஆ. கு. சுப்பையா : இம்மாதிரி எருமைக்கன்றுகள் கோயம் புத்தூர் ஜில்லாவுக்கு மட்டும் தான் கொடுக்கப்பட்டிருக்கிறதா? அல்லது, மற்ற மாவட்டங்களுக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறதா?

கனம் திரு. பூ. கக்கன் : தற்போது கோயம்புத்தூர் ஜில்லா விலுள்ளவர்களுக்கு கொடுக்கப்பட்டதைப்பற்றி கேட்டிருந் தார்கள். பதில் சொல்லப்பட்டது. தஞ்சாவூர் ஜில்லாவைப்பற்றி கேட்டால் பதில் சொல்லலாம்.

திரு. வை. சங்கரன் : இவ்விதம் கொடுக்கப்பட்ட தனிப்பட்ட வர்கள் பொருளாதார வசதியில்லாதவர்களா? வசதியுள்ளவர் களாக இருந்தால், ஏன் அவர்களிடமிருந்து இதனுடைய விலையை வாங்குவதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுக்கவில்லை?

கனம் திரு. பூ. கக்கன் : நமக்கு இனமாக கிடைத்த கன்றுகள், இனமாக கிடைத்ததை, இனமாக கொடுத்தோம். இதில் அரசாங்கம் லாபம் பெற வேண்டிய அவசியமில்லை.

திரு. எம். எஸ். மணி : ஸார், திருச்சி-ஸ்ரீரங்கம் கூட்டுறவு பால் வழங்கும் சங்கத்திற்கு தர்பார் கன்றுக்குட்டிகள் வந்திருக் கின்றன. இதுவும் இனமாகவே வந்திருக்கின்றன. இதற்காக ரயில் கட்டணத்திற்கு 60, 70 ரூபாய்தான் ஆகிறது. ஆகவே, இம் மாதிரி இனமாக கிடைக்கின்ற கன்றுக்குட்டிகளை உறுப்பினர் களுக்கு கொடுக்க சர்க்கார் ஏற்பாடு செய்யுமா?

கனம் திரு. பூ. கக்கன் : எங்கே இருக்கின்ற உறுப்பினர்களுக்கு கொடுக்கவேண்டும் என்று அங்கத்தினர் அவர்கள் சொல்லு கிறார்கள் என்று தெரியவில்லை.

திரு. எம். எஸ். மணி : பால் வழங்கும் சங்கத்திலுள்ள அங்கத் தினர்களுக்கு கொடுக்க வேண்டும் என்றுதான் சொல்லுகிறேன். கனம் அமைச்சர் அவர்கள் எண்ணுவது போல் இங்குள்ள சட்ட சபை அங்கத்தினர்களுக்கோ அல்லது பார்லிமென்ட் அங்கத்தினர் களுக்கோ கொடுத்தாலும் நல்லது தான்.

கனம் சபாநாயகர் : எல்லோருக்கும் எப்படிக் கொடுப்பது? மாடுகளை வைத்து, பாதுகாத்துக்கொள்ள தெரியவேண்டாமா?

[2nd February 1966

திரு. எம். எஸ். மணி : எதற்காக இதைக்கேட்கிறேன் என்றால், இவ்விதம் கொடுக்கப்படுகிற கன்றுக்குட்டி ஒவ்வொன்றுக்கும் 500 ரூபாய் வரை மதிப்பிடுகிறார்கள். இவ்விதம் அதிக விலையுள்ளதை தனிப்பட்ட நபர்களுக்கு இனாமாகக் கொடுப்பதற்குப் பதிலாக பால் வழங்கும் சங்கத்திலுள்ளவர்களுக்கு கொடுக்கலாமல்லவா என்பதைத்தான் கேட்கிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : சொஸைட்டிகளுக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. அது போன்று தனிப்பட்டவர்கள் பலரும் மாடுகளை வளர்ப்பதில் மிக அக்கரை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். திரு. முத்துசாமி அவர்கள் இம்மாதிரி கன்றுக்குட்டிகள் வேண்டும் என்று விரும்பி கேட்டிருந்தார்கள். அதோடு இதற்கான டிரான்ஸ்போர்ட் சார்ஜையும் ஏற்றுக்கொள்ள முன்வருபவர்களுக்கு கொடுக்கிறோம். இம்மாதிரி விரும்பி யாராவது கேட்டால், இதற்காக சர்க்காரிடம் அப்ளிகேஷன் போட்டால்—கன்றுக்குட்டிகள் இனாமாக கிடைக்கும்போது—இப்போது அல்ல—கிடைக்கும் போது பின்னால் கொடுக்கலாம்.

திரு. கோ. சி. மணி : இம்மாதிரி தனிப்பட்டவர்களுக்கு கொடுக்கப்பட்ட கன்றுகள் நல்ல முறையில் வளர்ந்து வருகின்றனவா ? அல்லது, ஏதாவது சேதம் அடைந்திருக்கின்றனவா ?

கனம் திரு. பூ. கக்கன் : இதற்கான பதிலை நான் முன்னே சொன்னேன்.

திரு. கி. இரா. சம்பந்தம் : இம்மாதிரிப்பட்ட முர்ரா எருமைகள் சிக்கிரத்தில் பலன் பெறுவதில்லை என்கின்ற தகவல் சர்க்காருக்கு வந்திருக்கிறதா ? அப்படியானால் செயற்கை முறையில் சிக்கிரத்தில் பலன் ஏற்படுவதற்குரிய ஏதாவது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றதா ?

கனம் திரு. பூ. கக்கன் : இப்போது கன்றுக்குட்டிகள் தான் கொடுத்திருக்கிறோம். இன்னும் கன்றுகளே ஈனவில்லை அதற்குள் பலனைப்பற்றி எப்படிச் சொல்ல முடியும் ?

கனம் சபாநாயகர் : அதற்கு என்ன காரணம் என்று கேட்கிறார்.

கனம் திரு. பூ. கக்கன் : இவையெல்லாம் சிறு கன்றுகளாக இருக்கின்றன. அது தான் காரணமாக இருக்க முடியும்.

திரு. இரா. நாராயணன் : இந்த முர்ரா கன்றுகளை பஞ்சாயத்து யூனியன்களுக்கும் கொடுத்து, கிராமத்திலுள்ள மக்களுக்கு உதவி செய்ய சர்க்காருக்கு உத்தேசமுண்டா ?

கனம் திரு. பூ. கக்கன் : பஞ்சாயத்து யூனியன்களிலிருந்து அவை சார்பாக கூட்டுறவு சொஸைட்டிகள் அமைத்து இதற்காக அப்ளிகேஷன் போட்டால் இதைப்பற்றி பரிசீலிக்கலாம்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : இந்திய அரசாங்கம் இன விருத்திக்காக எருமைக்கன்றுகளை மட்டும்தான் கொடுத்திருக்கிறதா அல்லது வேறு எதையேனும் கொடுத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

2nd February 1966]

கனம் திரு. பூ. கக்கன் : *இந்திய அரசாங்கம் கொடுக்கவில்லை. டெல்லியில் பசுங்கன்றுகளையும் தருகிறார்கள். இதற்காக மத்திய சர்க்காரிடத்தில் அப்ளிகேஷன் போடலாம். சில அங்கத்தினர்கள் பசுங்கன்றுகளையும் கொண்டு வந்திருக்கிறார்கள்.*

திரு. இராம. அரங்கண்ணல் : *ஒரு முர்ரா எருமைக்கு 2,000 ரூபாய் விலையாகிறது. நம்முடைய அரசாங்கம் நமக்கு கிடைக்கிற நல்ல சந்தர்ப்பங்களை எல்லாம் இழக்காது என்று நம்புகிறேன். அந்த முறையில் இனாமாக கிடைத்த இந்த கன்றுகளில் எத்தனை கன்றுகளை நமது மாதவரம் பால் பண்ணையில் விட்டு வளர்த்து வருகிறார்கள் என்பதை அறியவிரும்புகிறேன்.*

கனம் திரு. பூ. கக்கன் : *அந்தத் தகவல் என்னிடமில்லை.*

திரு. கி. இரா. சம்பந்தம் : *நான் கேட்டது, பொதுவாக முர்ரா எருமைகள் சிக்கிரத்தில் பலன்படுவதில்லை என்று சொல்லப்படுவது உண்மையா? இதைப்பற்றி சர்க்காருக்கு தகவல் கொடுக்கப் பட்டிருக்கிறதா? அப்படியென்றால் சிக்கிரத்தில் பலன் கொடுப் பதற்கு செயற்கை முறையில் ஏதாவது நடவடிக்கை எடுக்க சர்க்கார் உத்தேசித்திருக்கிறதா? என்பதுதான்.*

MR. SPEAKER : So, the Hon. Member's question is not about these calves.

திரு. ம. கமலநாதன் : *தலைவர் அவர்களே, இந்திய அரசாங்கத் திலிருந்து, ஆண்டு ஒன்றுக்கு எத்தனை கன்றுகள் இனாமாக நமக்கு கிடைக்கின்றன என்பதை அறியலாமா?*

கனம் திரு. பூ. கக்கன் : *இந்திய அரசாங்கத்திலிருந்து கிடைக்க வில்லை. டெல்லியில் தெருவில் கூட பல கன்றுகள் திரிந்து கொண் டிருக்கின்றன. அவைகளைப் பிடித்துத் தருகிறார்கள். பார்லி மெண்ட் மெம்பர்கள் பலர் இவ்வாறு கொண்டு வந்திருக்கிறார்கள். இப்போது நமக்கு கிடைத்தது, பம்பாய் மில்க் யூனியனிலிருந்து இனாமாக கொடுக்கப்பட்டது.*

வேலூரில் மாணவ, மாணவிகளுக்குத் தனித்தனி விடுதிகள்

* 55 **கேள்வி.—திரு. ர. ஜீவரத்னம் :** *கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—*

(அ) வடாற்காடு ஜில்லா வேலூரில் மாணவர், மாணவிகளுக் கெனத் தனித்தனியே ஹாஸ்டல்கள் கட்டும் உத்தேசம் சர்க்காருக்கு உண்டா?

(இ) ஆம் என்றால், எப்பொழுது வேலை துவக்கப்படும்?

கனம் திரு. பூ. கக்கன் : *(அ) இல்லை.*

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

(*a*) No, Sir.

(*b*) Does not arise.